**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 401/2024**
**வழக்கு சாட்சி PW– 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜான் செல்லப்பா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | தேவ ஆசிர்வாதம் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | திப்பணம்பட்டி | வயது | : | 75 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 13th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் திப்பணம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பு ஒருநாள் போலீசார் வந்து என்னுடைய வீட்டிலிருந்து 40 அடி தூரத்தில் பார்வையிட்டு எழுதினார்கள். நான் வீட்டின் முன்னால் நின்று கொண்டிருந்தேன். நான் என்ன எழுதுகிறீர்கள், என்று கேட்டேன். அவர்கள் விசாரணைக்காக வந்திருப்பதாக சொன்னார்கள். என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நான் போட்டு கொடுத்தேன். பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த வழக்கிற்காக விசாரிக்க வந்தார்கள் என்று என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை –** இல்லை.

<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No. 401/2024**</u>

<u>**வழக்கு சாட்சி PW- 6**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வினிஸ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | அருணாச்சலம் | தொழில் | : | சர்வீஸ் மேனேஜர் |
| கிராமம் | : | அரியப்பபுரம் | வயது | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 13th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் அரியப்பபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பஜாஜ் ஷோ ரூமில் சர்வீஸ் மேனாக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் சேதமதிப்பு சான்றில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 16.06.2023 அன்று பாவூர்சத்திரம் காவல்நிலையத்திலிருந்து ஒரு வண்டியின் சேதமதிப்பை கணக்கீடு செய்ய வேண்டும் என எனக்கு அறிவித்தார்கள். நான் பாவூர்சத்திரம் காவல்நிலையம் சென்று TN-76-AL-0466 என்ற சி.டி.100 ஐ பார்த்து சேதம் ரூ.15,901/- என சான்று வழங்கினேன். அந்த சான்று **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

நான் பஜாஜ் நிறுவனத்தில் 8 வருடங்களாக வேலை பார்த்தேன். அங்கு அ.சா.1 மாரியப்பன் வேலை பார்த்தார் என்றால் சரிதான். அவர் 10 வருடங்கள் அங்கு வேலை பார்த்தார். பஜாஜ் நிறுவனத்தின் ஏஜென்ட்

வேல் மோட்டார்ஸ் என்றால் சரிதான். அந்த வாகனத்திற்கு வேல் மோட்டார்ஸில் சர்வீஸ் செய்யப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த வாகனம் அ.சா.1 பயன்படுத்திய வாகனம் என்றால் சரிதான். அந்த வாகனத்தின் உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியாது. நான் முதல்விசாரணையில் சொன்னவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 க்காக வேண்டி வேல் மோட்டார்ஸ் உரிமையாளர் சொன்னதிற்கிணங்க ஒரு பொய்ச்சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.14 18:29:19 +0530